# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 06 ஞாயிற்றுக்கிழமை (21-07-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 155

## ஜனாதிபதி அவசரமாக நாடு திரும்புகிறார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது லண்டன் விஜயத்தை முன் கூட்டியே முடித்துக் கொண்டு உடனடியாக நாடு திரும்புகிறார்.

தகவல் திணைக்களம் நேற்று இதனை அறிவித்தது.

ஜனாதிபதி தமது இரு பிள்ளைகள் சகிதம் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த வார இறுதியில் லண்டன் சென்றிருந்தார்.

அவரது லண்டன் விஜயம் கடைசிவரை மிகவும் அந்தரங்கமாகவே வைக்கப்பட்டிருந்தது லண்டன் சென்ற பின்பே அவரது லண்டன் விஜயம் குறித்து வெளியே தெரிய வந்தது.

முல்லைத்தீவு முகாம் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தியதையடுத்தும், கடற்படையின் பீரங்கிப் படகு நீரில் மூழ்கடிக்கப் பட்டதையடுத்தும் ஜனாதிபதி உடனடியாக நாடு திரும்புகிறார் என்று இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது. (இ-3)

# 'ரணவிரு' பீரங்கிப் படகு 40படையினருடன் தகர்ப்பு

### அவர்களில் நால்வர் மீட்கப்பட்டனராம்

முல்லைத்தீவு முகாமில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான படையினருக்கு உதவுவதற்காக கடல் வழியாக மீட்பு அணியை ஏற்றிக் கொண்டு வந்த ஸ்ரீலங்கா கடற்படையின் ''ரணவிரு'' பீரங்கிப் படகு நேற்று முன் தினம் மாலை 5.45 மணியளவில் கடற்புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டது.

முல்லைத்தீவுக் கடலில் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் புலிகளின் தற்கொலைப் படையினர் சென்ற இரு படகுகள் அதன் மீது மோதி அதனை மூழ்கடித்ததாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இத்தாக்குதலின் போது

(6ஆம் பக்கம் பார்க்க)

# முல்லை முகாமின் நிலைமை குறித்து அரசு-புலிகள் முரணான அறிவிப்பு

## பலியானோர் தொகை குறித்தும் இரு தரப்பும் வேறுபாடான தகவல்

கொழும்பு, ஜூலை 21

**கடந்த வியாழன் அதிகாலை முதல் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் முல்லைத்தீவு முகாமின் தற்போதைய நிலை குறித்து அரசு— புலிகள் ஆகிய இருதரப்பினரும் முரணான தகவல்களை வெளியிட்டிருக்கின்றனர்.**

**முகாம் முற்றிலும் தகர்த்தழிக்கப்பட்டு விட்டதாகப் புலிகள் அறிவித்த அதேசமயம்ஒரு தொகுதிப்படையினர் இன்னும் முகாமைத் தக்க வைத்துக்கொண்டு உதவிக்குவரும் படையணியை எதிர்பார்த்துக் காத்திருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் அறிவித்திருக்கின்றன.**

**இதேபோன்று இச்சண்டையில் உயிரிழந்த அரச துருப்புகள் மற்றும் புலிகளின் எண்ணிக்கை குறித்தும் முரணான தகவல்களை இருதரப்பினரும் வெளியிட்டிருக்கின்றனர்.**

''இந்த முகாம் முற்றாகத் தகர்க்கப்பட்டுவிட்டது. இது எங்களுக்கு ஒரு பெரிய வெற்றி'' — என்று புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஆனால்—

முகாமிலிருந்த படையினரில் பெரும்பாலானோர் ஒன்றாகச் சேர்ந்திருந்து தம்மையும் தமது முகாமையும் பாதுகாத்து வருவதாக ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் கொழும்பில் தெரிவித்தார்.

முகாமின் பாதுகாக்கப் பட்ட பகுதிக்குள் பிரதான தெருவில் இருந்து சற்றுத் தொலைவில் மற்றுமொரு படையணியினர் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு தளத்தைப் பாதுகாக்கும் முகமாக நடந்த சண்டையில் இதுவரையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புப்பணிக்கு தரையிறக்கப்பட்ட படையணியும் புலிகளும் மோதல்

### லெப்டினன்ட் கேணல் உட்பட 37 படையினர் பலி!!

கொழும்பு, ஜூலை 21

முல்லைத்தீவு முகாமில் சிக்குண்டிருக்கும் ஸ்ரீலங்காப் படைகளை மீட்டு, அவர்களுக்கு உதவுவதற்காக அலம்பில் பகுதியில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலை எதிர்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

தரையிறக்கப்பட்ட அணிக்கு தலைமை வகித்த லெப்டினன்ட் கேணல் கொட்பில் லாகூர் உட்பட 37 படையினர் இச்சண்டையில் உயிரிழந்தனர் என்றும் —

ஆறு அதிகாரிகள் உட்பட 58 படையினர் காயமடைந்தார்கள் என்றும்—

காயமுற்ற படையினர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் அநுராதபுரம் மற்றும் கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனா என்றும்—

ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது.

மேலதிகமாக அனுப்பப் பட்ட படையினர் புலிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி முல்லைத்தீவு முகாமுடன் இணைவதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் --

முன்னேறிச் செல்லும் [illegible] கொள்வதற்காக நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் எதிரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா காயமுற்ற செய்தி விடுதலைப்புலிகள் மறுப்பு

முல்லைத்தீவு தாக்குதல் நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் காயமுற்றார் என வெளியான ஏஜென்ஸிச் செய்திகளை விடுதலைப் புலிகள் இயக்கம் மறுத்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பிரபாகரன் காயமுற்றதாக வெளியான செய்தியை ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களும் மறுத்திருந்தது தெரிந்ததே.

தாக்குதலை தலைவர் பிரபாகரன் திட்டமிட்டு ஒருங்கிணைத்து வருவதாக புலிகளின் அறிக்கை தெரிவித்துள்ளது. (உ-4)

### புலிகளின் "ஓயாத அலைகள்"

முல்லைத்தீவு முகாம் பகுதியில் கடந்த வியாழன் அதிகாலை முதல் தாம் நடத்தி வரும் தாக்குதலுக்கு ''ஓயாத அலைகள்'' என விடுதலைப் புலிகள் பெயர் சூட்டியிருப்பதாக செய்தி நிறுவனங்கள் அறிவித்தன.

கிழக்கிலங்கையில் கடந்த வாரம் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்டமட்டுப்படுத்தப் பட்ட படை நடவடிக்கைக்கு ''பொங்கும் அலைகள்'' (''சட பஹற'') எனப் பெயர் சூட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-4)

### ஹெலியும் வீழ்ந்தது?

மணிலா, ஜூலை 21

முல்லைத்தீவு முகாம் பகுதியில் தொடர்ந்து நடைபெறும் சமரின்போது முல்லைத்தீவுத் தெற்குப் பகுதியில் படையினரின் ஹெலிக்கொப்டர் ஒன்றைப் புலிகள் வீழ்த்தினரா?

அத்தகைய தகவலை திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் உள்ள காவல்துறையினர் வெளியிட்டதாக ''ரோய்ட்டர்'' செய்தி நிறுவனத்தை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

## படையினரின் சடலங்களை ஒப்படைக்க புலிகள் தயார்!

### செஞ்சிலுவையுடன் தொடர்பு

கொழும்பு, ஜூலை 21

முல்லைத்தீவு ராணுவ முகாம் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை அரசிடம் கையளிப்பதற்கு தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் அறிவித்துள்ளனர் என்று வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

அதேசமயம் இது தொடர்பான பேச்சுக்கள் நடப்பதை உறுதி செய்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி, ஒப்படைக்கப்படும் சடலங்களின் எண்ணிக்கையை வெளியிடவில்லை என்றும்—

கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை மீட்பதற்கு வவுனியாவில் உள்ள இராணுவ அதிகாரிகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடி உள்ளனர் என்றும்—

இதற்காக சில வாகனங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டிருப்பதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணிகளை நோக்கிச் சூடு

கொழும்பு ஜூலை 21

தாண்டிக்குளம் தடுப்புக் காவல் நிலையத்தில் காத்திருந்த தமிழ் மக்களை நோக்கி நேற்று முன்தினம் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாயும்- அதிர்ஷ்ட வசமாக எவரும் காய மடையவில்லை என்றும் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (உ-4)

## 24 ஆயிரத்து 340 பேருக்கு விசேட அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 21

இதுவரை யாழ். மாவட்டத்தில் 24 ஆயிரத்து 340 பேருக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளனஎன்றுஆட் பதிவுத்திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

அரச திணைக்களங்களில் கடமையாற்றுவோர் அந்தந்த திணைக்களத் தலைவர் ஊடாகவும் —

பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபர் ஊடாகவும் — விண்ணப்பங்களை கையளிக்கலாம்.

பொதுமக்களுக்கு இந்த அடையாள அட்டையை விநியோகிப்பதற்கு அந்தந்தப் பகுதி பிரதேச செயலர்கள் பொறுப்பாக இருப்பார்கள். அவர்கள் கிராம சேவையாளர்கள் ஊடாக விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுவார்கள்.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் கையிருப்பில் இருக்கின்றபோதும் படம் பிடிப்பதற்கான படச்சுருள்களுக்கும் —

படங்கள் கழுவுவதற்கு பயன்படுத்தப்படும் இரசாயன மருந்துகளுக்கும் — தட்டுப்பாடு நிலவுவதால் அடையாள அட்டை வழங்குதல் மந்தகதியில் நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ.4)


தொண்டர் ஆசிரியர் சங்கம்

யாழ். மாவட்டம்

### விசேட பொதுச் சபைக் கூட்டம்

காலம்:- 23 — 07 — 96 (செவ்வாய்)
நேரம்:- முற்பகல் 10.30 மணி
இடம்:- பட்டப்படிப்புக்கள் கல்லூரி
ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.

முக்கிய விடயங்கள் ஆராயப்படவிருப்பதால் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

(41894) செயலாளர்



### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
### காரியாலய திருத்த வேலை

மேற்படி திருத்த வேலைக்கு உடனடியாக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு 24-07-96-க்கு முன் கூறுவிலையை சமர்ப்பிக்கவும்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி-2659)



### யாழ். வெஸ்கோ மருந்தகம்
### தேவை

எமது நிறுவனத்தில் கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

★ முகாமையாளர் — மந்திகை
★ ஆங்கில மருந்து விற்பனையாளர் — மந்திகை
★ ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்தாளர் — யாழ்ப்பாணம்.
★ தொழில் பயிலுனர் — யாழ்ப்பாணம்

தொழில், கல்வித்தகைமையுடன் விண்ணப்பிக்கவும் விண்ணப்பப்படிவத்தை நேரில் / தபால் மூலம் பெறலாம்.

யாழ். (வெஸ்கோ) மருந்தகம்,
470 (250), ஆஸ்பத்திரி வீதி, (O. P. D. முன்பாக)
யாழ்ப்பாணம். (41895)



### C-90 கொண்டாமோட்டார் சைக்கிள்

இல: த 2 – 8567

18 - 04 - 96 அன்று கிளாலி பயணத்தின் போது கிளாலிக்கு அண்மையாக ஒரு வீட்டில் விட்டுச் சென்ற மேற்படி ரக நீலநிற மோட்டார் சைக்கிள் தொடர்பாக இதுவரை எதுவித தொடர்புகளையும் மேற் கொள்ள முடியாதுள்ளது. இச் சைக்கிளை தமது பாதுகாப்பில் வைத்திருப்பவரோ அல்லது இது தொடர்பாக தகவல் தரக்கூடியவர்களோ இருப்பின் கீழ் வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. யோகநாதன்
அண்ணமார் கோவிலடி,
உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.

(41891)



### மீண்டும் ஆரம்பம்

### சம்பந்தன் வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

★ காது, மூக்கு, தொண்டை ★ சருமரோகம்
★ பெண்நோயியல் ★ மகப்பேறு
★ பொதுவைத்தியம் ★ குழந்தைவைத்தியம்

போன்ற சகல விதமான நோய்களுக்கும் இங்கு வைத்திய நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம் குறிப்பு:- செவ்வாய், வெள்ளி காலை 10.30 மணிக்கு டாக்டர் (திருமதி) அம்பலவாணர் VOG வருகை தருவார்.

சம்பந்தன் வைத்திய நிலையம்
இலங்கை வங்கி அருகாமையில்.
574/1 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(41884)


## அமெரிக்க தூதுவர் எச்சரிக்கை

மணிலா, ஜூலை 21

இலங்கையின் யால தேசிய விலங்குகள் சரணாலயத்துக்குச் செல்ல வேண்டாம் என்று அமெரிக்கப் பிரஜைகளை இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரித்துள்ளது.

யாலவன விலங்கு சரணாலயப் பிரதேசத்துக்குள் பெரும் எண்ணிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடுருவிவிட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தே அமெரிக்கத் தூதுவரின் எச்சரிக்கை வெளிவந்துள்ளது. (இ-3)

## புறநிலை படிப்பு அலகு வகுப்புக்கள்

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இதழியல், சூழலைப் பேணுதல், உளவளத் துணை, தொடர்பியலுக்கான ஆங்கிலம், உடற்கல்வி, அலுவலக முகாமைத்துவம் ஆகிய அடிப்படைக் கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிகளில் பயில விரும்புவோர் கற்கை நெறியின் தலைப்பைக் குறிப்பிட்டு புறநிலைப் படிப்புக்கள் அலகிற்கு விண்ணப்பிக்கலாம் என புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார். (உ)

## தாதியர் பரீட்சை அனுமதி அட்டை வரவில்லை

யாழ், போதனா வைத்திய சாலையில் கடமை புரியும், தாதியர் தரம் "ii பி" யிலுள்ள தாதியர்களுக்கு தரம் உயர்த்துவதற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் பலருக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படவில்லை என்றும்-

எனினும் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து தாதிய உத்தியோகஸ்தர்களையும் பரீட்சையில் பங்கு கொள்ள வைப்பதற்கான முயற்சிகளை, வைத்திய சாலை [illegible] மேற் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-4-15)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை தங்கரத்தினம்

ஏழாலை தெற்கைச்சேர்ந்த சின்னத்துரை தங்கரத்தினம் 19-7-96ல் காலமாகிவிட்டார் இவர்காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், சந்திரலீலா, தங்கவடிவேல் (இ போ.ச. சாரதி யாழ். சாலை), புஷ்பரத்தினம், காலஞ்சென்ற பரஞ்சோதி, கந்தசாமி, யோகராசா, யோகராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம், பவளராணி, சிவப்பிரகாசம், மார்க்கண்டு, காலஞ்சென்ற பாஸ்கரி, கனகேஸ்வரி, சுகுமாரன் ஆகியோரின் அன்புமாமியாரும், சறோஜா, ராஜ்குமார் (பல்பொருள் வர்த்தக நிலையம்), சுஜன், சுஜிதா, ஜெதன், ரமேஷ், மதுரா, அருள்நந்தினி, அருள்வதனா, அருட்செல்வன், அறிகரன், அருள்ராஜ், சுமணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஏழாலையில் நடைபெற்றன.

தகவல்:
சி. தங்கவடிவேல்
(மகன்)

'பவாகிரி'
ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (சி/2660)

திருமதி

## கந்தையா வள்ளிப்பிள்ளை

கருகம்பனை கவுணாவத்தை வயிரவர்கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது சண்டிலிப்பாயில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவி வள்ளிப்பிள்ளை (19- 7- 96) வெள்ளி மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவபாக்கியவதி, பத்மாவதி, சரஸ்வதி, சற்குணவதி, தவலிங்கம் (லங்காசீமெந்து லிமிட்டெட்) சிவலிங்கம், (கிராம உத்தியோகத்தர், நகுலேஸ்வரம்) அருள்லிங்கம், (கா. சீ. கூட்டுத்தாபனம்) மகாலிங்கம், (திருப்பதி ரெக்ஸ்), பஞ்சலிங்கம் (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்லக்குட்டி, சின்னத்துரை, வல்லிபுரம், சோமசுந்தரம், சரஸ்வதி, விமலாதேவி, இராசபூபதி, இராசமலர் ஆகியோரின் அன்புமாமியாரும் செல்வராணி, கந்தசாமி, காலஞ்சென்ற செல்வரட்ணம், ஜெயராணி, புஸ்பராணி, விஜயராணி, ஜெயராசா, புஸ்பராசா, விஜயராசா, தேவபாஸ்கரன், ஜெயச்சந்திரன், உதயகரன், கிரிதரன், பிரதீபன், சதீஸ்பாமா, சத்தியசீலன், மயூரா, சதீஸ்குமரன், சசிகரன், சிவசுதன், பரீதா, சுகீர்தன், லக்சலா, நித்தியா, நிரோஜா, அகல்யா, நிதர்சன், பிரியலோஜினி, இந்துஜா, பகீர்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சுதாயினி, சுதர்சன், சுரேந்திரன், கிரிசாந்தி, ரவிந்தன், கேபிகா, தயாபரன், தர்சினி, பிரதீபன், சுயதீபன், கவீசன், தயாபரன், தனுசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் (20- 7- 96) சனிக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:-
க. மகாலிங்கம் (பஞ்சு)
மகாவித்தியாலய முன் ஒழுங்கை, (திருப்பதி ரெக்ஸ்)
கோயில்வளவு,
சண்டிலிப்பாய் (41896)

## செல்லம்மா சிவஞானசுந்தரம்

(நீர்வேலி)

நீர்வேலி வடக்கு செல்லம்மா சிவஞானசுந்தரம் 19 - 07 - 1996 அன்று காலமானார். இவர் நீர்வேலி ஆயுர்வேத வைத்தியர் வினாசித்தம்பி சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், தர்மசேகரம், கமலாதேவி, தங்கராசா, (வேலைப் பரிசோதகர் பிரதேச செயலகம், கோப்பாய்), நவரத்தினராசா (தவம்), யோகராணி, யோகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி (தையல் போதனாசிரியை, முறைசாராக் கல்வி), யோகேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), யோகநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், விபுசானந்தி, உஷானந்தி, பிரஷானந்தி, லாவண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். இறுதிக்கிரியைகள் 20 - 07 - 1996 நீர்வேலி வடக்கில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
சி. தங்கராசா
(மகன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (41887)

## திருமதி நாகபூசணி தம்பிராசா

கோப்பாய் தெற்கு பரமேஸ்வரி அம்பாள் வீதியைச் சேர்ந்த திருமதி நாகபூசணி தம்பிராசா நேற்றுக் காலமானார்.

இவர் வே. தம்பிராசா (முன்னாள் கிராம சபை உறுப்பினர், முன்னாள் உப-தலைவர், அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி மீனலோஜனி B.A.- (ஆசிரியை), திருமதி பத்மலோஜனி, செல்வி நீலலோஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும், கா. அழகரத்தினம் (பொறியியலாளர், கொழும்பு), ச. சிவஞானேஸ்வரன் (பொறியியலாளர் இ. போ. ச.) ஆகியோரின் அன்பு மாமியாரும், நா. நாகராசாவின் அன்புச் சகோதரியும், சத்தியேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

இவரது தகனக்கிரியை இன்று (21-7-96) காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இருபாலை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
வே. தம்பிராசா
(கணவர்)

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (41898)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீகாரில் மின்னல் தாக்குதலுக்கு
# 15 மாணவர் உட்பட 24 பேர் பலி!

## இருபது பேர் காயம்

புதுடில்லி ஜூலை 21
இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் இடம் பெற்ற இரு வேறு மின்னல் தாக்கு சம்பவங்களில் பதினைந்து பாடசாலை மாணவர் உட்பட 24 பேர் உயிரிழந்தனர்; இருபது பேர் வரை காயமடைந்தனர்.

தசாறியாக் மாவட்டத்துக்கு 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தலுவக்கல்ல என்ற கிராமத்தில் பாடசாலை ஒன்றை மின்னல் தாக்கியதில் அங்கு வகுப்பறையில் கல்வி பயின்று கொண்டிருந்த 15 மாணவர் கருகி உயிரிழந்தனர்; இருபது பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அதற்கு முதல் நாள் — வியாழக்கிழமையன்று மாலையில் நாளாந்தா மாவட்டத்தில் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி ஒன்பது தொழிலாளர்கள் உயிரிழந்தனர். (உ-இ-4)

## சீனாவில் யாங்சி நதி பெருக்கெடுக்கும் அபாயம்

### அணைகட்ட 40 லட்சம் பேர்

பீகிங், ஜூலை 21

சீனாவின் மிகப் பெரிய நதியான யாங்சி நதி கரையை உடைக்கும் ஆபத்து நிலையை அடைந்துள்ளதைத் தொடர்ந்து மணல் மூலம் கரையை உயர்த்தும் அவசர பணியில் சுமார் 40 லட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

1933 ஆம் ஆண்டு யாங்சி நதி கரை உடைத்தபோது 32 ஆயிரம் மக்கள் பெருவெள்ளத்தில் மூழ்கி இறந்து போனார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் செப்டெம்பரில் தேர்தல்

### 4 கட்டங்களாக நடக்கும்

புதுடில்லி, ஜூலை 21
உத்தரப் பிரதேசம் மற்றும் ஜம்மு — காஷ்மீர் மாநிலங்களின் சட்டப் பேரவைத் தேர்தல்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்திருக்கின்றது.

சர்ச்சைக்குரிய ஜம்மு — காஷ்மீர் மாநிலத்தில் நீண்ட காலத்திற்குப் பிறகு சட்ட சபைத் தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

அங்கு நான்கு கட்டங்களில் தேர்தல்கள் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அண்மையில் நடந்துமுடிந்த பொதுத்தேர்தலின் போது ஜம்மு — காஷ்மீரிலும் மூன்று கட்டங்களில் வாக்களிப்பு இடம் பெற்றதும்—

மாநில மக்கள் இந்தத் தேர்தலில் பெரும் ஆர்வத்துடன் வாக்களித்ததும் தெரிந்தவையே.

அந்தத் தேர்தல் வெற்றியாக நடத்தி முடிக்கப்பட்டிருப்பதை அடுத்தே அங்கு சட்டசபைத் தேர்தல்களையும் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.


## காணவில்லை

### சுப்பையா மகாதேவா

(மகாலிங்கம்) சைக்கிள் திருத்துபவர்

11/4, பண்டாரக்குளம் வீதி, நல்லூரிலிருந்து 07 – 07 – 1996 இல் புறப்பட்டார். அவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து எங்களுக்கு அறியத் தரவும்.

சு. சண்முகராசா,
இளைப்பாறிய விலை மதிப்பீட்டாளர்,
387, கோவில் வீதி, நல்லூர். (41889)


## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 — 09 — 1938

உதிர்வு: 21 — 07 — 1990

திருமதி
### பிறின்சி சறோஜினி ஜெயராசா

குன்றாத பேரன்புக்
குடும்பத் தலைவியென
நின்றாடி எங்களது
நினைவிற் குடியிருக்கும்
மங்காத தாய்மை
மகுடமே! உன் நினைவு
தங்காத நாளிலையாம்;
தரணியில் எம்மிடையே!

தகவல்;
கணவர், பிள்ளைகள்

வட்டுக்கோட்டை. (41872)

## ரஷ்ய ரயில் நிலையத்தில் சக்திவாய்ந்த குண்டு

மொஸ்கோ, ஜூலை 21
ரஷ்ய ரயில் நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடிக்கவில்லை. இந்தக் குண்டை வெடிக்கச் செய்வதற்காக 'பாக்' ஒன்றில் வைக்கப்பட்டிருந்த கருவி செயற்படவில்லை.

இதனால் 1.5 கிலோ நிறையுள்ள இந்த குண்டுவெடிக்கத் தவறிவிட்டது.

மொஸ்கோவுக்கு தெற்கேயுள்ள வொறனேஎள் ரயில் நிலைய தங்கும் அறையில் இந்தக் குண்டு வைக்கப்பட்டிருந்ததால் இதன் மூலம் பாரிய அழிவை ஏற்படுத்த முடியும் என அதை வைத்தவர்கள் எண்ணியிருக்க கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-4)

## உலக அரங்கில்

## யுத்தகால துப்பாக்கிக்குண்டு வெடித்தது

புதுடில்லி, ஜூலை 21
இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்ட வெடிக்காத துப்பாக்கிக் குண்டு ஒன்று நேற்று முன்தினம் கல்கத்தா விமான நிலையத்தில் வெடித்து பீதியை ஏற்படுத்தியது.

தொழிலாளர்களில் ஒருவரின் மண்வெட்டி பட்டபோது குண்டு வெடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதேபோன்ற 23 குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-4)

ஜெயலலிதா விவகாரம்

## பாதுகாப்பை நீக்குமாறு நாம் கோரவில்லை

### கருணாநிதி கூறுகிறார்

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டிருந்த தேசிய பாதுகாப்பு படையின் பாதுகாப்பை விலக்கிக் கொள்ள மத்திய அரசுக்கு மாநில அரசு எந்த வித பரிந்துரையும் செய்யவில்லை.

இப்படி தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தமிழ்நாடு சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

இது குறித்து அவையில் அ. தி. மு. க உறுப்பினர் திருநாவுக்கரசு ஒரு பிரச்சினையை எழுப்பியபோது குறுக்கிட்ட முதலமைச்சர் எவருடைய பாதுகாப்புக்கும் விரோதமாக தமிழக அரசு செயற்படவில்லை என்றும் —

ஜெயலலிதாவின் பாதுகாப்புக்கு தமிழக காவல் துறையைச் சேர்ந்த 40 பேரை அரசு நியமித்திருப்பதாகவும் தெரிவித்தார். (இ-4)


## MISSING

### SUPPIAH MAHADEVA
### ALIAS MAHALINGAM

( Push Bicycle Manager – Mechanic )

Left Residence 11/4, Pandarakulam Road, Nallur for Ariyalai on 07 - 07 - 1996.

Special appeal is made to Authorities to trace his Whereabouts.

S. Sanmugarajah,
Retired Asst. Govt. Valuer,
387, Temple Road, Nallur.

(41888)


## மீனவரை தேடும் பணி

சென்னை ஜூலை 21
கடந்த திங்கட்கிழமை இராமேஸ்வரத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களைக் காணவில்லை என்று மாவட்ட மீனவர் சங்கம் கொடுத்துள்ள முறைப்பாட்டின் அடிப்படையில் அந்த மீனவர்களையும் அவர்கள் சென்ற படகையும் மாநில மீன்வளத் துறையினர் தேடி வருகிறார்கள். (இ-4)

## மியான் மார்மீது பொருளாதார தடை?

புதுடில்லி, ஜூலை 21
மியான்மாரில் காணப்படும் மனித உரிமை மீறல்களை எதிர்க்கும் விதத்தில் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை கொண்டுவர வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் கேட்டுள்ளது.

மியன்மாரின் இராணுவ ஆட்சியாளர்கள் மீது நெருக்குதல் கொண்டுவர இதுவும் ஒரு வழி என்று அது கூறுகிறது. (இ-3

## காஷ்மீருக்கு சுயாட்சி; அமெ. ஆதரவு

புதுடில்லி, ஜூலை 21
காஷ்மீர் மாநிலத்துக்கு சுயாட்சி வழங்க இந்தியா முன்வந்துள்ளதை இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவர் பிராங் வைஸ்னர் வரவேற்றுள்ளார்.

ஆனால் உண்மையான பிரச்சினைகளில் இருந்து உலக நாடுகளை திசை திருப்பும் [illegible] இந்தியா [illegible] பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. (இ-3)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 02 — 1921

மறைவு: 21 — 06 — 1996

### திருமதி வேலாயுதம் தங்கம்மா

(முன்னாள் யாழ். போதனா வைத்தியசாலையின் ஒய்வு பெற்ற பரிசாரகர்)

வீட்டிற்கோர் ஒளி விளக்காய் — எம்
நாட்டிற்கோர் விடி விளக்காய் — எம்
குலத்திற்கோர் குல விளக்காய் — எம்
குலம் காத்த தெய்வமே அம்மா
ஆருயிர் போல் எம்மையெல்லாம்
அன்பால் அணைத்தீரே இன்று
எம்மை எல்லாம் தவிக்க விட்டு எங்கு சென்றீர்
சென்றுவிட்ட திசையறியோம்
தேம்புகின்றோம். இங்கு எமக்கு
ஆறுதல் கூற இங்கு யாருமே இல்லையம்மா
உம்மைப் பிரிந்தின்று முப்பத்தியொருநாள்
ஆனதுவோ

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்பாளை வேண்டிக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

உமது பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

தொல்புரம் மத்தி
சுழிபுரம். (41822)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

அச்சகமொன்றிற்கு பயிலுனர்கள் தேவை. நேரில் வரவும். 233, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச் சந்திக்கு அருகில்) (41865)

வரவேற்பாளர் பதவிக்கு ஆள் தேவை. விபரங்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும். ஸ்ரூடியோ நித்ய சித்ரா, சங்கானை. (41825)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா வாத நோய்கள், வலிப்பு நோய், மாதவிடாய் குத்து குழந்தை வைத்தியம், மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (41747)

### மீண்டும் இயங்குகிறது

கடந்த 140 வருடங்களுக்கு மேல் தீவகத்தில் சேவையாற்றிய பாக்கியம் வைத்தியசாலை மீண்டும் பழைய இடமான K. K. S. வீதியில் மனோகரா சந்திக்கு அருகாமையில் (100 யார் தூரத்தில்) இயங்குகின்றது. நிர்வாகம் Dr. ச. திருக்குமரன். (41785)

### கணிதம்

ஆண்டு 7 முதல G. C. E. (O/L) வரை மாணவர்களுக்கு திறமைமிக்க ஆசிரியரினால் வீட்டிற்கு வந்து கணிதம் கற்பிக்கப்படும். தொடர்பு: புதிய இல. 192, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (4186)

### தவறி விட்டது

இரவீந்திரன் பரமேஸ்வரி (121/4, சோலைபுரம், காரை நகர் வீதி கொட்டடி, யாழ்ப்பாணம்) ஆகிய எனது 598044180V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 19-07-96 அன்று, ஆஸ்பத்திரி வீதியில் தவறி விட்டது. இதனை சண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். லிங்சம்ஸ்ரோர்ஸ், பீச்றோட், வில்லூன்றி பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (41879)

### O/L கணிதம்

Distinction; Credit பெறுபேறடைய இதுவரையும் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும் கற்பிக்கப்படும். London Inter ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி (41807)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. (41726)

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் விரைவாக ஆங்கிலம் பேசப்பயில ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சிறு குறூப்பாக மட்டும்.) (41815)

### (O.L) MATHS 96

ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், இது வரையும் சித்தியடையாதவர்களுக்கும், 30 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் No:- 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி. (41750)

### விற்பனைக்கு

15 ஆயிரம் வெற்றுச்சாக்குகள், உரப்பை ஆகியன விற்பனைக்குண்டு. தங்கள் விலையைக் குறிப்பிட்டு 31-7-96க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் ப. நோ கூ. சங்கம் — வ. து., 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/2655)

### இசை வகுப்புக்கள்

வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைக்கு அமைய வித்துவான் பிரம்மஸ்ரீ மோகன் சர்மா அவர்களால் வயலின், மிருதங்க வகுப்பு நடத்தப்படும். புதிதாக சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சி. மைதிலி 33, பழைய தபால் கந்தோர் வீதி, தலையாழி, கொக்குவில் கிழக்கு கொக்குவில். (41843)

## நன்றி கூறும் ஆராதனை

கர்த்தருக்குள் நித்திரை அடைந்த

திருமதி

**பரிபூரணம் துரைராஜசிங்கம்**

அவர்களது வாழ்க்கைக்கு நன்றி கூறும் ஆராதனை **27-07-96** அன்று காலை 11-00 மணிக்கு (புதிய நேரம்) உரும்பராயில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

**போதகர் ஜே. கே. பிலிப்**

உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (41858)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 16 – 07 – 1918

மறைவு: 21 – 06 – 1996

**திருமதி சரஸ்வதி முத்துத்தம்பி**

அன்போடும் பண்போடும் பாசத்தோடும் வளர்த்து எங்களை வழி நடத்திய எங்கள் அன்பு அம்மாவே! மாமியே! அப்பம்மாவே! அம்மம்மாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பொற்பதி விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.

அமரரின் ஆத்மசாந்திக் கிரியைகளும் வீட்டுக் கிருத்திய கிரியைகளும் 21-07-96 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11-30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்கள். அனைவரையும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மறவாமல் மனமுருகி நிற்கும்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''கலாஸ்தான்''
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (41831)


கோவில் தேவைகளுக்குரிய

★ குடை ★ கொடி
★ ஆலவட்டம் ★ வாகைமாலை

என்பவற்றுக்கு பெயர் பெற்ற ஸ்தாபனம்

**அஜந்தாஸ்**

**AJANTHAS - TEXTILES**

54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

25, 4ம் [illegible] தெரு,
யாழ்ப்பாணம். (41737)


கல்வியுலகில்

28 ஆண்டுகளாக சேவையாற்றிவரும்

**இருபாலை**

## எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

இன்று **21-07-96** காலை 8 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகிறது.

- ★ ஆண்டு **4** முதல் **O/L** வரை
- ★ வழமையான ஆசிரியர் குழுவினர்
- ★ பாடத்திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.
- ★ **O/L, 5**ஆம் ஆண்டு மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள்.
- ★ மாதாந்த பரீட்சைகள்
- ★ ஒரு வகுப்பில் ஒரு பிரிவு மட்டுமே.

மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால், வகுப்புக்களில் குறிப்பிட்ட இடங்களே உண்டு. உடன் உங்கள் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அதிபர்

(41878)

தென் இந்திய திருச்சபை யாழ். ஆதீனம்

**தொழிற் பயிற்சி நிலையம்**

## ஆசிரியர் தேவை

எமது மானிப்பாய் நிலையத்தில் பின்வரும் பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

முடிவு திகதி:— 30—ஜூலை—1996

தையல், மனைப்பொருளியல்,
கைப்பணி, கைவேலை

திட்டப்பணிப்பாளர்

ஆதீன காரியாலயம்
வட்டுக்கோட்டை. (C/2652)

**சமூக அபிவிருத்தி மன்றம்**

## முக்கிய அறிவித்தல்

சமூக அபிவிருத்தி மன்றம், 257/2 1 ஆவது மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், என்னும் முகவரியில் 08-05-96 ஆம் திகதி முதல் இயங்கி வருகின்றது. எனவே தயவு செய்து எமது கிளைக்கழக நிர்வாக உறுப்பினர்களும், அங்கத்தவர்களும், இதனை கவனத்தில் கொண்டு எம்முடன் தொடர்பு கொள்வதோடு கழக நிர்வாகிகள் கழகங்களை தொடர்ந்து இயக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகச் செயலாளர்,
சமூக அபிவிருத்தி மன்றம்.

(41880)

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்: 05 – 05 – 1925

மறைவு: 02 – 07 – 1996

அமரர்

**வேலுப்பிள்ளை பொன்னையா**

அப்பா! அன்பே உருவமாய் பண்பே உணர்வாய்
பாசமே நினைவாய் வாழ்ந்த எமது அன்புத் -
தெய்வமே!

நித்தம் நினைந்து நெகிழ - நம்
நெஞ்சங்களை நினையாது சித்தத்தை
சிவன்பால் வைத்தீரோ எம் திருவே
உங்கள் ஆத்மா சாந்தியுற பிரார்த்திக்கின்றோம்.

22-07-1996 திங்கட்கிழமை சாவகச்சேரி வடக்கு, பன்றிக்கேணி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. (41873)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## நோய் தடுப்பில் கவனம் தேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மலேரியா, நெருப்புக் காய்ச்சல், செங்கண்மாரி போன்ற நோய்கள் வெகு வேகமாகப் பரவி வருகின்றன.

இந்த நோய்கள் மூன்றும் சாதாரணமானவை அல்ல. உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவை. தப்பின் உடலில் ஏதோ வகைப் பக்க விளைவைத் தரக்கூடியவை.

மலேரியா, நெருப்புக் காய்ச்சல் நோய்கள் பயங்கரமான தொற்று வியாதிகளும் ஆகும். குறிப்பாக மலேரியா படு வேகமாகப் பரவக் கூடியது. இது நுளம்புக் கடியினால் உண்டாவது.

முன்னர் எல்லாம், மழை காலத்தில் தான் நுளம்புத் தொல்லை அதிகமாக இருப்பதுண்டு. கோடை காலத்தில், காற்று வீசும் காலத்தில் நுளம்புத் தொல்லை நீங்கி விடும்.

நகரப் பகுதிகளில், தண்ணீர் தேங்கி நிற்கும் சாக்கடைகள் நிறையவுள்ள பகுதிகளில் மட்டும் நுளம்பு வருடம் முழுவதிலும் மனிதனுக்கு எதிரியாவது உண்டு.

ஆனால் இப்போது நகரம், பட்டினம், கிராமம் என்ற வேறுபாடின்றி கோடைப் பருவத்திலும், காற்று வீசும் காலத்திலும் நுளம்பு இரவு பகல் வேறுபாடின்றி மக்களைக் கடித்துத் தின்கிறது.

சென்ற வருடத்து மாரி மழையோடு, குடாநாட்டு மக்கள் இடம் பெயர்ந்ததால், வீடுகள், வளவுகள் பராமரிப்பு இன்றிக் கிடந்ததால், எங்கும் மரம், செடி வளர்ந்து காடு மண்டிக் கிடக்கிறது. அதன் காரணமாக ஏனைய வருடங்களை விட இந்த வருடத்தில் நுளம்பு பல்கிப் பெருகியுள்ளது.

கடந்த பல வருடங்களாக மலேரியா தடுப்பு வேலைகள், நுளம்பு ஒழிப்புப் பணிகள், ஒழுங்கு சீராக நடக்கவில்லை நுளம்புகளை ஒழிக்கப் பயன்படுத்தப்படும் தெளி மருந்துகள் போதிய அளவில் கிடைக்காமையால் யாழ்ப்பாணம் மலேரியா பிரதேசமாக மாறும் ஆபத்து இருந்தது. மக்களின் ஆறுமாதகால இடம்பெயர்வு அதனை மேலும் மோசமடையச் செய்துவிட்டது.

ஆனால், மக்கள் பெரும் எண்ணிக்கையில் மீளக்குடியமர்ந்து மூன்று மாதங்களாகியும், நுளம்பை அழிப்பதற்கான தெளி மருந்துகள் இன்னும் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லை. இதற்குப் பொறுப்பான அதிகாரி யாழ்ப்பாணத்துக்கு வந்து நிலைமையை நேரில் பார்த்துவிட்டுச் சென்றும் தேவையான மருந்து வகைகள் இன்னும் வந்து சேரவில்லை.

மக்களை நோயிலிருந்து காப்பாற்றும் பணிகளில் அக்கறையின்மையும் அசமந்தமும் விரும்பத்தகாதவை.

உணவு, மருந்து போன்ற மக்களின் அன்றாட வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற அவசர நடவடிக்கை தேவை.

உணவு, உடை, உறையுள், மருந்து, தண்ணீர் — இந்த ஐந்தும் மனிதனுக்கு மிகமிக இன்றியமையாதவை. இவற்றை குறைவின்றி வழங்க அவசர ஏற்பாடுகள் தேவை.

அதில் கவனம் செலுத்தாமல் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக வெறுமனே பிரசாரம் செய்வது உகந்ததல்ல.

# ஆசிரியர் பயிற்சிக்கு என தனியான அதிகார சபை

## 30 ஆயிரம் பேருக்கு ஒரே சமயத்தில் போதனை

கொழும்பு, ஜூலை 21

★ ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் பொருட்டு ஒரு புதிய ஆசிரியர் பயிற்சி அதிகார சபை அமைக்கப்படும். அதன் மூலம் முப்பதாயிரம் ஆசிரியர்களுக்கு ஒரே சமயத்தில் பயிற்சியளிக்கப்படும்.

★ இந்த அதிகார சபையின் கீழ் 5 விஞ்ஞான பீடங்களும் நிறுவப்படும். பிராந்திய மட்டத்தில் 100 பயிற்சி நிலையங்களும் திறக்கப்படும். இதற்குத் தேவையான நிதியை உலக வங்கி வழங்கும், கல்வித்துறையின் வளர்ச்சிக்காக இவ்வளவு பெரிய தொகையை உலக வங்கி வழங்க முன் வந்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இத்தகவல்களை கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன வெளியிட்டார்.

தேசிய கல்வி நிறுவகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பட்டதாரி டிப்ளோமா விருது வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையிலே அவர் இத்தகவல்களை வெளியிட்டார்.

புதிய பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டவுடன் ஒரு லட்சத்து 93 ஆசிரியர்களுக்கு மற்றுமொரு பயிற்சியை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளத் திட்டம் தற்போது அமுலில் இருக்கிறது. எனவே கல்வி அபிவிருத்திக்காக ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்து பணியாற்ற வேண்டும்.

பட்டதாரிகள், அதிபர்கள் சம்பந்தமான சம்பளங்கள் குறித்து சம்பள ஆணைக்குழு தெரிவித்துள்ள பரிந்துரைகளும் நடைமுறைப் படுத்தப்பட இருக்கின்றன. கல்வித்துறை அறிஞராக கலாநிதி பிரேமதாஸ உடகம இந்தக் குறிக்கோளை அடையும் பொருட்டு தேசிய கல்வி நிறுவகத்தை வழிநடத்திச் செல்ல நியமிக்கப்பட்டுள்ளார் —இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(உ-4)

## வல்வை ஊடாக மினி பஸ்

வடமராட்சி, ஜூலை 21

வல்வெட்டித்துறை ஊடாக யாழ்ப்பாணத்துக்கான மினி பஸ் சேவை பருத்தித்துறையிலிருந்து மீண்டும் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் காலை 7-30 மணிக்கும் 9-30 மணிக்கும் பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் மினி பஸ் பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறைக்குத் திரும்பும்.

இம் மினிபஸ் சேவையை வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கிறது.

(இ-173)

## தேசிய ஆசிரியர் மாநாட்டில் 5 கோரிக்கைகள் முன்வைப்பு

கொழும்பு, ஜூலை 21

★ உத்தேச அதிபர் சேவையை உடன் ஸ்தாபித்தல்.

★ தேசிய கல்விக் கொள்கையினை ஏற்படுத்தல்.

★ தேசிய இடமாற்றக் கொள்கையினை ஏற்படுத்தல்.

★ ஆசிரியர் சேவைத் திட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களை அமுல் செய்தல்.

★ மாணவர்களுக்கான மதிய போசனத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

— ஆகிய ஐந்து கோரிக்கைகளைதேசிய ஆசிரியர் மாநாடு முன்வைத்துள்ளது.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடந்த இந்த ஆசிரியர் தேசிய மாநாட்டில் இந்த கோரிக்கைகளை நிறைவேற்ற எடுக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி ஆராயப்பட்டது.

இந்த மாநாட்டில் இலங்கையில் உள்ள எட்டு ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## வேலையற்ற பட்டதாரிகள் ஒன்று கூடி சத்தியாக்கிரகம்

வேலையற்ற பட்டதாரிகள் சுமார் ஆயிரம் பேர் கடந்த வியாழனன்று கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

பட்டதாரிகள் பயிற்சித் திட்டத்தில் பயிலுனர்களாக உள்ளவர்கள் உட்பட வேலையில்லாத பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் பலரும் சங்கத்தலைவர் எஸ். எம். என் சமரக்கோன் தலைமையில் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

பல சுலோக அட்டைகளையும் இவர்கள் வைத்திருந்தனர்.

25 ஆயிரம் பட்டதாரிகள் வேலையின்றி உள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

## சோமசுந்தரம் ராஜினாமா

தமிழக முன்னாள் அமைச்சர் எஸ். டீ. சோமசுந்தரம் அனைத்திந்திய அண்ணா தி. மு க.வின் துணைச் செயலாளர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

இது சம்பந்தமாகச் சென்ற மாதம் 10ஆம் திகதி அவர் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கு எழுதிய கடிதம் நேற்று முன்தினம் சென்னையில் வெளியிடப்பட்டது. (இ-4)

# யுத்தம் முடிந்ததாக அரசு கூறுகிறது; ஆனால் முல்லையில் பெரும் தாக்குதல்

## ரணில் எழுப்பும் கேள்வி

கொழும்பு, ஜூலை 21

யுத்தம் முடிவடைந்து விட்டதாக அரசாங்கம் கூறுகிறது ஆனால் புலிகள் முல்லைத்தீவில் மிகப் பாதுகாப்பாக இருந்த இராணுவ முகாமைத் தாக்கி உள்ளனர்.

ஐ. தே. க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கேள்வி எழுப்பி உள்ளார்.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக வியாழன் மாலை நடைபெற்ற கண்டி மாவட்ட ஐ. தே. க. பிரசார கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

''நாடு இன்று பேராபத்தில் வீழ்ந்துள்ளது. மக்கள் சொல்லொணாத் துன்பங்களில் ஆழ்ந்திருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் நாட்டின் தலைவரான ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ சில அமைச்சர்களோ நாட்டில் இல்லை.

இவ்வாறான நிலையில் நாட்டை இவர்களால் எவ்வாறு ஆட்சி செய்ய முடியும்.''

யாழ்ப்பாணத்தை பிடித்து விட்டதாக செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

செய்தித் தணிக்கையை அகற்றி நாட்டின் உண்மையான நிலைமையை மக்களுக்கு அறிவிக்கவேண்டும். உண்மையில் என்ன நடந்தது என்று ஒருவருக்கும் தெரியாது.

இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த போது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்த வின்சன்ற் சேர்ச்சில் அன்று மன்னராக இருந்த 6 ஆவது ஜோர்ஜிடம் சென்று ''உங்கள் குழந்தைகளுடன் வேறு நாட்டுக்கு செல்லுங்கள்'' என்று கூறினார்.

''நான் மக்களுடன்தான் இருப்பேன். எங்கும் செல்ல மாட்டேன்'' என்று அவர் கூறினார்.

மக்களைக் காப்பதில் அவருக்கு அன்று இருந்த அக்கறை எமது நாட்டில் இன்று எவருக்குமே இல்லை.

—இப்படி அவர் தெரிவித்தார். (இ-3)

## கொழும்பிலிருந்து வந்த இருவர் வவுனியாவில் கைது

கொழும்பில் இருந்து வவுனியா வந்த இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நடராசா செல்வேந்திரன் (வத்தளை), சங்கரலிங்கம் கதிர்காமநாதன் (நீர்கொழும்பு) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

வடக்கே வேப்பங்குளம் பயணிகள் முகாமில் தங்கியுள்ள தமது உறவினர்களை கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்காக வந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

வேப்பங்குளம் முகாம் அருகே கைது செய்யப்பட்டு வவுனியா மாவட்ட நீதிவான் எஸ். தியாகேந்திரன் முன் இவர்கள் இருவரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

நாளை 22 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (இ-3)

## தென்னிலங்கை இளைஞரை திரட்டும் நடவடிக்கை

### நேற்று ஆரம்பமாக இருந்தது

கொழும்பு, ஜூலை 21

சமுர்த்தி சமாதானப் படை என்ற பெயரில் பத்தாயிரம் பேர்கொண்ட தென்னிலங்கை இளைஞர்களைத் திரட்டும் நடவடிக்கை நேற்று ஆரம்பமாக இருந்தது.

இராணுவ முகாம்களிலும், உதவி அரசாங்க அதிபர் நிலையங்களிலும் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

வடக்கு- கிழக்குப் பகுதியில் இராணுவத்தால் பிடிக்கப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்தும் நடவடிக்கைக்காக இவர்கள் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டதும் —

தென்னிலங்கை இளைஞர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவதற்கு கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்ததும் தெரிந்தவையே.

சமுர்த்தி சமாதானப் படைக்கு யாழ்ப்பாண மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கக் கூடிய நிலையில் இல்லாததால் தென்னிலங்கையில் இருந்து இளைஞர்களைத் திரட்ட முடிவு செய்யப்பட்டதாக இளைஞர் விவகார கிராம அபிவிருத்தி விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்திருந்தார். (இ3)

# அடுத்த வாரம் முதல் டீசல் விநியோகம்

## அதற்கு வரிப்பத்திரம் அவசியம்

கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு எடுத்துவரப்பட்டுள்ள டீசல் அடுத்தவாரம் முதல் விநியோகிக்கப்படும் என்றும்—

செயலக மோட்டார் பதிவு திணைக்களத்தில் இவ்வாண்டுக்கான வரியை செலுத்தி வரிப்பத்திரத்தைப் பெற்ற வாகன உரிமையாளர்களே இந்த டீசலை பெறலாம் என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் வாகனங்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் உத்தரவு பெற்ற எரிபொருள் முகவர்களால் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி என்று மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு நிறத்தில் வழங்கப்பட்டுள்ள அட்டையைமுகவர்களிடம் சமர்ப்பித்து மண்ணெண்ணெய் பெறலாம் என்றும்—

அந்த அட்டைக்கு 10 நாள்களுக்கு ஒரு தடவை மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை முகாமின்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) கிடைத்துள்ள தகவல்களின் படி 142 படையினர் உயிரிழந்துள்ளனர் என்றும்—

168 படையினர் வரை காயமடைந்துள்ளனர் என்றும்—

ஸ்ரீலங்கா அரசுத் துருப்புகளின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்ற படையினருக்கு முகாமில் உள்ள வசதிகளைக் கொண்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் அந்தத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

புலிகள் தரப்பிலும் பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாக அரசுத் தரப்பு கூறியது.

இச்சண்டையில் புலிப் போராளிகள் 181 பேர் கொல்லப்பட்டதை அந்த இயக்கம் நேற்று மாலை ஏற்றுக் கொண்டது என்றும்—

உயிரிழந்தவர்களில் 124 பேரின் பெயர் விவரங்களை அந்த இயக்கம் வெளியிட்டுள்ளது என்றும்—

ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு அறிக்கை கூறியது.

பல தடைகளைக் கொண்டிருந்த முல்லைத்தீவு தளத்தின் மீதான தாக்குதலில் புலிகள் ''மனித அலை'' உபாயத்தைக் கடைப்பிடித்ததால் அவர்கள் தரப்பில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்படுவதாகவும்—

ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு அறிக்கையில் கூறப்பட்டது

ஆனால் —

இச்சண்டையில் முல்லைத்தீவு முகாமைத் தகர்த்த விடுதலைப் புலிகள் எண்ணூறுக்கும் அதிகமான படையினரைத் தாங்கள் கொன்றொழித்திருப்பதாகவும் —

உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்களைத் தேடி ஒன்று சேர்க்கும் பணியைத் தாங்கள் ஆரம்பித்திருப்பதாகவும் —

அறிவித்ததாக பி.பி.ஸி, வெரித்தாஸ், இந்திய வானொலி, தூரதர்ஷன் போன்ற செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டன.

தமது தரப்பில் இதுவரை 140 போராளிகள் வீரச்சாவடைந்ததாகவும் புலிகள் அறிவித்ததாக இச் செய்தி நிறுவனங்கள் குறிப்பிட்டன.

## மீட்புப் பணிக்கு . !

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) யின் தாக்குதல்களையும் பொருட்படுத்தாமல் விமானப் படையினர் மேலும் பல சிப்பாய்களை அங்கு தரையிறக்கினர் என்றும் —

அரசுத் தரப்பு அறிவிப்பு மேலும் தெரிவித்தது.

இதே சமயம் —

மீட்பு அணி இன்னமும் முல்லைத்தீவு முகாமை எட்டவில்லை என்றும் —

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலால் அது சாத்தியப்படவில்லை என்றும் — இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

அலம்பிலில் தரையிறக்கப்பட்ட ஸ்ரீலங்காப் படைகளின் மீட்பு அணி மீது தாங்கள் கடும் தாக்குதல் நடத்தி வருவதாக புலிகளும் அறிவித்துள்ளனர்.

# இராணுவ இழப்புகளால் பலர் ஆத்திரம், அதிருப்தி!

### அமல் ஜெயசிங்க பி. பி ஸி. பேட்டியில் தகவல்

கொழும்பு, ஜூலை 21

ஈடுசெய்ய முடியாத பெரிய அளவிலான இழப்புகள் குறித்து பலர் அதிருப்தியடைந்துள்ளதுடன் ஆத்திரமும் அடைந்துள்ளனர்.

ஏ. எவ். பியின் கொழும்புச் செய்தியாளர் அமல் ஜெயசிங்க பி. பி ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

முன்னணி அரண்களின் கட்டளை அதிகாரி விசேட அதிரடிப் படையைச் சேர்ந்தவர் முதலில் கொல்லப்பட்டவர்களில் இவரும் ஒருவராவார்.

மேலதிகப் படை உதவிகள் முல்லைத்தீவு முகாமை சென்றடைவதை விடுதலைப் புலிகள் தடுத்து வருகின்றனர் என்பதை இந்தச் சம்பவம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இராணுவத் தகவல்களின்படி மேலதிகமாக அனுப்பப்பட்ட உதவிப் படையணிகளுடன் விடுதலைப் புலிகள் கடும் சமரில் ஈடுபட்டுள்ளனர்.

யுத்தம் சம்பந்தமான செய்தித் தணிக்கை நடைமுறையில் இருப்பதால் முல்லைத்தீவு தாக்குதல் தொடர்பான தகவல்களை உள்நாட்டு மக்கள் அறிந்துகொள்ள முடியாதுள்ளது.

யுத்த செலவினங்கள் கட்டுக்கு அடங்காத நிலையை அடைந்துள்ளது இது குறித்து பிரதி நிதி அமைச்சர் கடந்த வாரம் எச்சரித்தும் உள்ளார். இந்த நிலையில் இன்னும் சில ஆண்டுகள் நாங்கள் போரை நடத்தினால் நாடு வங்குறோத்து நிலையை அடையும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் அடிக்கடி அரசுக்குத் தலையிடியைக் கொடுக்கும் ஆற்றல் விடுதலைப் புலிகளுக்கு இருக்குமானால் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தக்கூடிய வளங்கள் அரசுக்கு இல்லாமற் போகலாம்.

படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் பொது மக்கள் பெருமிதம் அடைந்தனர். உள்ளூர் பத்திரிகைகளாலும், அரசியல்வாதிகளாலும் உருவாக்கப்பட்டு பேணப்பட்டு பெருமைப்பட்ட காலம் தற்போது முடிவடைந்துவிட்டது.

இவ்வாறு நிகழும் பெரிய அளவிலான இராணுவ இழப்புகள் ஈடு செய்யப்பட முடியாதவை. நிலைமை குறித்து பலர் அதிருப்தியடைந்துள்ளது மாத்திரமல்ல ஆத்திரமும் அடைந்துள்ளனர். — என்றார்.

# மீட்பு அணி ஓரிரு நாளில் முகாமை அடையாவிடில் நிலைமை மோசமாகும்

### இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

முல்லைத்தீவு முகாமிலிருந்து நான்கு அல்லது ஐந்து மைல்கள் தூரத்தில் ஹெலிகள் மூலம் தரை இறக்கப்பட்ட மீட்பு அணி இன்னும் முகாமைச் சென்றடையவில்லை. இன்று அல்லது நாளைக்குள் மீட்பு அணி முகாமைச் சென்றடையாவிட்டால் பாரதூரமான பிரச்சினைகள் உருவாகும். உணவு, தண்ணீர், ஆயுத தளபாடங்கள் போன்றவற்றுக்கும் —

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் —

மீட்பு அணி விரைவில் முகாமைச் சென்றடைய வேண்டும்.

'' சண்டேரைம்ஸ் '' இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் பி. பி. ஸிக்கு நேற்று அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு முகாமுக்கு தென்புறத்தில் மீட்பு அணி இறக்கப்பட்டது. எனினும் போராளிகளின் மோட்டார் தாக்குதல்கள் காரணமாக மீட்பு அணியின் முகாம் நோக்கிய பயணம் மந்த கதியை அடைந்துள்ளது.

இன்றும் மேலதிக மீட்பு அணிகள் தரையிறக்கப்பட்டன. இருப்பினும் இவ்வாறு தரையிறக்கப்பட்ட மேலதிக மீட்பு அணிகள் எதுவும் முகாமைச் சென்றடையவில்லை.

இராணுவ முகாமில் இருந்த படைவீரர்கள் பற்றி தெளிவான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இராணுவத்திற்கு புதிதாக ஆட்சேர்க்கப்பட்டுவரும் இவ்வேளையில் இத்தாக்குதலினால் அரசுக்கு பல பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

உள்நாட்டில் கடும் பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது. இராணுவத் தரப்பினரும், இராணுவப் பேச்சாளரும் இன்னமும் படையினர் முல்லைத்தீவு இராணுவ முகாமை வீழ விடாது காப்பாற்றி வருவதாகவும் மீட்பு அணி முகாமை அண்மித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆனால் உண்மை நிலைமை முற்றிலும் வேறானது என்பதை நம்பிக்கையான தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்படி அவர் தெரிவித்தார்.

## மல்லாகத்தில் அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 21

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை திங்கட்கிழமை மல்லாகத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று வலி-வடக்குப் பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகம் தெரிவித்தார்.

(இ-3)

## 'ரணவிரு'..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) கடற்படையினர் திருப்பித் தாக்கியதில் புலிகளின் பல படகுகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டன என்றும் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

தாக்குதலுக்கு இலக்கான சமயம் அப்பீரங்கிப் படகில் 40 கடற் படையினர் இருந்தார்கள் என்று கூறப்படுகின்றது.

அவர்களில் நால்வரை பின்னர் கடற்படையினர் மீட்டனர் என பி. பி. ஸி. அறிவித்தது.

அப்பகுதியில் எஞ்சிய கடற்படையினரைத்தேடும் பணி நடைபெறுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

வெடி மருந்துகள் ஏற்றப்பட்டு ஐந்து கடற்கரும்புலிகளுடன் சென்ற இருபடகுகளே 'ரணவிரு' பீரங்கிப்படகுடன் மோதி அதனைத் தாக்கிய தாக ''வெரித்தாஸ்'' வானொலி தகவல் வெளியிட்டது.

# அட்லாண்டா ஒலிம்பிக் ஆரவாரமாக ஆரம்பம்

அட்லாண்டா, ஜூலை 21

நூற்றாண்டு நவீன ஒலிம்பிக் போட்டிகள் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை அமெரிக்க ஜனாதிபதியினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆரம்ப வைபவம் கண்ணுக்கு விருந்தளிக்கும் வண்ண நிகழ்வுகளுடன் — இசை, தொழில் நுட்பச் சிறப்புகளுடன் பெரும் பொருள் செலவில் — கோலாகலமாக நடைபெற்றன

இம்முறை போட்டிகளில் பங்குபற்றும் நாடுகள் தமது வீரர் குழுவில் கட்டாயமாக வீராங்கனைகளையும் சேர்க்க வேண்டும் என்ற விதியினால் ஒலிம்பிக் வரலாற்றில் இம்முறையே அதிக எண்ணிக்கையில் பெண் போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றனர்

இம்முறை அமெரிக்காவே அதிக பதக்கங்களைக் கைப்பற்றும் எனப்பரவலாக நம்பப்படுகிறது இப்போட்டி அவர்களது நாட்டில் நடப்பதும் இதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

கடந்த முறை அமெரிக்காவுக்குச் சவாலாக போட்டியிட்ட ஒன்றிணைந்த சோவியத் யூனியன் இம்முறை 15 நாடுகளாகப் பிரிந்து பங்குபற்றுகிறது.

கடந்த ஒலிம்பிக் போட்டிகளின் போது தென்கிழக்காசிய நாடுகளுக்கு ஒரேஒரு பதக்கம் மாத்திரமே கிடைத்தது. ஹொக்கிப் போட்டியில் 3 ஆவது இடத்தைப் பெற்றதற்காக பாகிஸ்தானுக்கு அப்பதக்கம் கிடைத்தது.

(உ-10)

## புறக்கோட்டை பகுதியில் 80 தமிழர் கைது

கொழும்பு, ஜூலை 21

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் பொலீஸார் நேற்று முன்தினம் திடீர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

விசாரணைக்கென சந்தேகத்தின்பேரில் 80 தமிழர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று கொழும்பு பிராந்திய பிரதி பொலீஸ் மா அதிபர் டி. எம். டி. திஸநாயக்க தெரிவித்தார்.

(இ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஞானம்மா பியற்றிஸ் நல்லையா (NEE ஞானம்மா பியற்றிஸ் மொறிஸ்)

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி ஞானம்மா பியற்றிஸ் நல்லையா நேற்று (20- 07- 96) சுண்டுக்குளியில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் திரு. K. G நல்லையா அவர்களின் அன்பு மனைவியாரும், காலஞ்சென்ற முன்னாள் கண் வைத்தியர் திரு. A. M மொறிஸ் — திருமதி ராசம்மா மொறிஸ் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு M. M. சிவப்பிரகாசத்தின் (பொறியியலாளர், நீர்ப்பாசன இலாகா) அன்புச் சகோதரியும், திருமதி கமலா தேவி, திரு K. N. Y மொறிஸ், திரு N. K. கிங்ஸ்லி, திருமதி பிறிமி ராஜதேவி, திருமதி கேட்டி ஞானதேவி, திரு N. L பாலசிங்கம், திரு N. G. P ராஜசிங்கம் ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு C. S அருள்நாயகம், திருமதி பவளமலர், திருமதி கமலாதேவி, காலஞ்சென்ற திரு. K. அந்தோனிப்பிள்ளை, திரு. N. செல்வநாயகம், திருமதி சரோஜினி, திருமதி பியூமா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21-7-96) பி.ப 3 மணிக்கு (புதிய நேரம்) நடைபெற்று பூதவுடல் சுண்டுக்குளி பரி - யோவான் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;

திருமதி G. p. R. அந்தோனிப்பிள்ளை (மகள்)

43/1, மொறிஸ் லேன்,
கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(41897)

### கந்தசாமி குகனேஸ்வரி

காலஞ்சென்ற வே. கந்தசாமி அவர்களின் (முன்னாள் விவேகானந்தா அச்சக உரிமையாளர்) அன்பு மனைவி குகனேஸ்வரி 18 - 7 - 96 இல் காலமானார்.

இவர் க. அன்பழகனின் அன்புத் தாயாராவார். இவரின் பூதவுடல் 19 - 7 - 96 இல் கைதடி மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
உறவினர்

கைதடி.

(41900)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 21-07-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org